மவுண்ட் றூயிட் தமிழ்க் கல்வி நிலையம்
Mount Druitt Tamil Study Centre

Mobile: 0413 229 638 | Email :mtdruitttsc@gmail.com | Web : www.mtsc.org.au





# ஆண்டு 10

பேச்சுப் போட்டி குறிப்பின் ஒலி வடிவத்திற்கு இந்த விரைவு எதிர்வினைக் குறியீட்டை வருடுக :

(குறிப்பு : இது ஒரு வழிகாட்டல் மட்டுமே. மாணவர்கள் தங்களது சொந்த வசன நடையில் இதனை பயின்று மேடையில் பேசுவதற்கு பெற்றோர்கள் ஊக்கப்படுத்தவும்)

## விழுமியக்கல்வி

சபையில் அமர்ந்திருக்கும் நடுவர்களே, ஆசியர் பெருமக்களே, பெற்றோர்களே சக மாணவ மாணவிகளே உங்கள் யாவருக்கும் எனது முதற்கண் வணக்கம். நான் இன்று உங்கள் முன் பேச எடுத்துக் கொண்ட தலைப்பு விழுமியக்கல்வி.

விழுமியக் கல்வி என்பது மனிதனிடைய நல்ல பண்புகளை, நல்ல நடத்தை மாற்றங்களை, ஒழுக்க மேம்பாடு, மதக் கல்வி, ஆன்மிக வளர்ச்சி, குடியுரிமைக் கல்வி, தனிமனித மேம்பாடு, சமூக மேம்பாடு மற்றும் கலாசார மேம்பாடு போன்றவற்றினை அதன் பல்வேறு அளவுகோள்களில் விபரிக்கும் கல்வி ஆகும். விழுமியக் கல்வியைக் குழந்தைத் தனது ஐந்து வயது வரை பெற்றோர்களிடமிருந்தும் இளையோர்கள் பாடசாலைச் சூழல், நண்பர்கள், மற்றும் சுற்றுப்புறச் சூழலில் இருந்தும் கற்றுக்கொள்கிறார்கள்.

தனிமனித, சமூக வாழ்வினை வளமானதாகவும், அர்த்தமுள்ளதாகவும், செம்மையான வகையில் வாழ்வதற்கும் விழுமியக்கல்வி இன்றியமையாததாகும். அதுமட்டுமன்றிக் கட்டிளம் பருவத்தில் பிரச்சனைகளுக்கு சரியான தீர்வுகாணவும், துன்பங்களைக் கண்ட துவண்டு விடாமல் துணிந்து நிற்பதற்கு வழிகாட்டுகின்றது.

தற்காலத்தில் தொழில்நுட்பம் ஆட்கொண்டுள்ள உலகில் மாணவர்களை விழுமியத்தில் வளரச் செய்வது மிகவும் கடினமான செயலாகும். பாடசாலையில் கற்கும் நல்ல பழக்கவழக்கங்களே மாணவர்களின் வாழ்க்கைக்கு சிறந்த வழிகாட்டியாக அமைகின்றன. வறுமை, பெற்றோர்களை இழந்த நிலை, கூட்டுக்குடும்பங்கள் தனிக்குடும்பமாக மாற்றப்பட்ட நிலை, பெற்றோரின் வேலைப் பளு, தொலைபேசி, தொலைக்காட்சி, இணையப் பாவனை, தகாத நண்பர்களின் சகவாசம், என பல குடும்பச் சூழ்நிலைகளுடன் மாணவர்கள் பாடசாலைக்கு வருகின்றனர்.

விழுமியக்கல்வியை கோட்பாட்டு முறையிலும் செயற்பாட்டு முறையிலும் மாணவர்களுக்கு வழங்குவதிலும் ஆசிரியர்கள், பாடசாலை முதல்வர்கள், பகுதி தலைவர்கள், சக மாணவர்கள், பெற்றோர்கள், பாடசாலை நலன் விரும்பிகள் ஆகியோர் மிக முக்கிய பங்கு வகிக்கின்றனர். பாடசாலைக்கு வருகின்ற மாணவர்கள் அங்கு இடம்பெறும் நடவடிக்கைகளை பார்த்தே சிறந்த முறையில் தங்களைச் செப்பனிடுகின்றார்கள்.

பெற்றோர்களே! ஆசிரியர்களே!! விழுமியக்கல்வியைக் கற்றுக் கொடுப்பதில் மாத்திரம் நின்று விடாமல் உங்கள் வாழ்விலும் கடைப்பிடித்து இளைய சமுதாயத்திற்கு ஒரு முன்மாதிரியாக வாழ்ந்து காட்ட வேண்டும். சபையோர்களே! "ஒப்புர ஒழுகு" என்ற ஔவைப்பாட்டியின் கூற்றின்படி விழுமியக்கல்வியை கற்று உலகத்தோடு ஒத்து வாழ்ந்து வீட்டுக்கும் நாட்டுக்கும் பெருமை சேர்ப்பேன் என்று கூறி விடைபெறுகிறேன்.

நன்றி .
வணக்கம்.



**ஆக்கம்:**
**திருமதி. ரதி சங்கர்**